# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13.944 —1964 පෙබරවාරි 7 වැනි සිකුරාදා —1964.2.7

13,944 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 7 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 27 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 28 | நாணயிதம் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசன திணைக்களம்

**மன்னார் உப பகுதி**

வியாட்டிக்குளத்தின் கீழ் உள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுத்தலுக்கான கேள்விப் பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வடமாகாண நீர்ப்பாசன பொறியியலாளரினால 1964 ம் ஆண்டு பங்குனி மாதம் 3 ம் திகதி செவ்வாயக்கிழமை காலை 10.00 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 33,500/- ம் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் மன்னாரில் உள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் மாசி மாதம் 28 ம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக் காரர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்று அறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50/- கேள்விப் பத்திர கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும். இக்கேள்விப்பத்திரக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

இக்கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
மன்னார் உப பகுதி.

முருங்கன்,
1964 ம் ஆண்டு ஜனவரி மீ 23 ந உ.

2-180—7.2.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,944

### நீர்ப்பாசன திணைக்களம்

**வவுனியா உப பகுதி**

வவுனியா மாவட்டத்திலுள்ள இலங்காத்தகுள திருத்தவேலைக்கான 9.1.64 தேதியிடப்பட்டு 17.1.64 தேதியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியான அறிவித்தல் சம்பந்தமாக இத்தால் அறியத்தருவது என்னவென்றால் நீர்ப்பாசன திணைக்களத்தில 35,000 ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இவ்வேலைக்குக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவர்கள் என்பதாகும்.

வி. குமாரசாமி,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
வவுனியா உப பகுதி.

வவுனியா,
24.1.64.

2-27—7.2.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,944

**1963/64 ம் நிதி வருடத்தின் இரண்டாவது பாதியில் திருக்கோணமலைப் பெரும்பகுதியிலிருக்கும் திருக்கோணமலைக் காணி அபிவிருத்தி அதிகாரியின் கீழுள்ள அல்லை, கந்தளாய் முதலிக்குளத் திட்டங்களுக்கும் திருக்கோணமலையிலுள்ள காணி அபிவிருத்தி அதிபரின் கட்டிடத் தாபனத்திற்கும் கட்டிடச் சாமான்கள் விநியோகிப்பதற்கான கேள்விப் பத்திர அறிவித்தல்**

1964 ம் ஆண்டு மாசி மாதம் 29 ந் திகதி மு.ப. 11.00 மணிவரை திருக்கோணமலை காணி அபிவிருத்தி அதிகாரியால் அல்லை, கந்தளாய் முதலிக்குளம் ஆகிய காணி அபிவிருத்தித் திட்டங்களுக்கும் திருக்கோணமலை காணி அபிவிருத்தி அதிபரின் கட்டிடத் தாபனத்திற்கும் கீழ்க்காணும் கட்டிடச் சாமான்கள விநியோகிப்பதற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :—

1. கிடுகு (7 அடிக்கு குறையாத நீளமும், 12 அங்குலத்திற்கு குறையாத அகலமும் கொண்ட 1000 சோடிகளுக்கு).
2. பச்சைசுண்ணும்பு—புசல்வீதம் (44 இருத்தலுக்குக் குறையாமல் நிறையுள்ள).
3. சுட்டசுண்ணும்பு—புசல் வீதம்.
4. கருங்கல்—$6'' \times 9''$ பருமானமுள்ள கீப்பு வீதம்.
5. உடைத்தகல்—கீப்பு வீதம் ($\frac{3}{4}''$ தொடக்கம் $2''$ மட்டும்).
6. செங்கல்—($8\frac{3}{4}'' \times 4\frac{1}{2}'' \times 2\frac{3}{4}''$ அளவுடைய 1000 வீதம்).
7. ஆற்றுமணல்—கீப்பு வீதம்.

2. கீழ்க்காணும் விநியோக முறைகளுக்கு வெவ்வேறு வீதங்கள் குறிக்கப்படவேண்டும் :—

(அ) தோட்டத்திலிருந்து/போறணையிலிருந்து/சூளையிலிருந்து — போறணையும் சூளையும் 5 மைல் சுற்றுடல் இருப்பின் ;

(ஆ) வேலைத்தலத்திற்கு.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50 கட்டுப்பணமாக ஒவ்வொரு திட்டத்திற்கும் இக்காரியாலயத்தில் அல்லது வேறு ஏதாவது கச்சேரியில் கட்டிய பற்றுச்சீட்டுக் கொடுக்க வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 26 ந திகதி மு.ப. 11.00 மணிவரை கொடுக்கப்படும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் குறிக்கப்பட்ட தொகைப் பொருட்களை குறிக்கப்பட்ட காலவெல்லைக்குள், காலத்திற்குக் காலம் இரண்டு வாரத் தவணையில் பொருட்களை விநியோகிப்பதற்கு அல்லது கொண்டு பங்கீடு செய்வதற்கு என்னுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும், கேள்விக்காரர்கள் யாதேனும் இவ்வண்ணம் விநியோகம் செய்ய மறுத்தால் அல்லது தவறினல் அவர் தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் கேள்விக்கட்டுப்பணத்தையும் இழக்க நேரிடும்.

5. 1964 ம் ஆண்டு மாசி மாதம் 29 ந் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்பொழுது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம்.

6. மற்றும் எந்த விபரங்களையும் கீழ்க்கையொப்பமிட்டிருக்கும் அதிகாரியிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பி. சங்காரவேல்,
காணி அபிவிருத்தி அதிகாரி.

காணி அபிவிருத்தி அலுவலகம்,
பிரடரிக் கோட்டை,
திருக்கோணமலை,
1964 ம் ஆண்டு தை மாதம் 25 ந் திகதி.

2-182—7.2.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,944

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### ஏலவிற்பனை அறிவித்தல்

ஒரு குவியல் கலிக்ஸ் கோற் றில் பொறிவகைகளை இரத்மலானை பொறிவகைப் பகுதி நீர்ப்பாசன பண்டகசாலை காரியாலயத்தில் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 14 ம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு பிரசித்தி ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

விற்பனைக்கு இருக்கும் பொருட்களை விற்பனை தேதிக்கு முதல் நாள் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3 மணிவரை, மேல் குறிப்பிட்ட காரியாலயத்தில் பரிசீலனை செய்யலாம்.

இவற்றை வாங்குவோர், செலுத்தவேண்டிய பணத்தை முழுத் தொகையாகச் செலுத்தி வாங்கிய பொருட்களை உடனடியாக எடுத்துச் செல்ல வேண்டும்.

பி. செல்லகேவா,
பொது முகாமையாளர்.

நீர்ப்பாசன பொறிவகைப் பகுதி,
இரத்மலானை,
1964 ம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ந் திகதி.

2-144—7.2.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,944

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது.

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல்வேண்டும்.

6. "நகலை" **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்"** அடித்தல் பிழைகளையும், **காலதாமதத்தையும்** தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் **கொள்ளப்படமாட்டா.**

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்ராறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட **மாட்டா.**

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 10 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... ... | 110 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... | 220 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடைப்படின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட் கிழமை பி. ப. 3.30 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. **சந்தா விபரம் 1–8–63 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.**

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 27 | 50 | ... | 40 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 17 | 50 | ... | 23 | 00 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 25 | 00 | ... | 33 | 00 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | சதம் | | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 30 | ... | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 60 | ... | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 15 | ... | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 30 | ... | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். **சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.